بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

### பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் *3.7.2015* அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

### Summary of the Friday Sermon - 3 July 2015 (Tamil)

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்தஆலா திருக்குர்ஆனில் நமக்காக தந்திருக்கிற கட்டளைகளை நினைவுபடுத்துவது அதனை மீண்டும் எடுத்துக் கூறுவது, ஞாபகமூட்டும் பொறுப்பில் உள்ளவர்கள் பிறருக்கும் ஞாபகமூட்டுவது ஆகியவை நம்பிக்கையாளர்களின் ஜமாஅத்தின் பணியாகும். நான் கூறியது போன்று அந்த கட்டளைகளை நினைவுபடுத்துவது அல்லது நினைவூட்டிக் கொண்டிருப்பது அவசியம். நினைவூட்டும் பொறுப்பில் இருப்பவர்கள் இவர்களுள் முரப்பிகள், பொறுப்பாளர்கள் நம் அனைவரும் அடங்குவோம்.

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் அமைப்பில் தலைமையக அமைப்புடன் கிளை அமைப்புகளும் உள்ளன. பிறகு ஜமாஅத் அமைப்பும் சரி; கிளை அமைப்பும் சரி நாடு தழுவிய அளவில் இருந்து உள்ளூர் அமைப்பு வரை பொறுப்பாளர்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பொறுப்பாளர்களும் கிலாஃபத்தின் கரங்களாக இருந்து பரந்த அளவில் கிலாஃபத்தின் பொறுப்புகளை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். இதனை எல்லா முரப்பிகளும் பொறுப்பாளர்களும் புரிந்து கொண்டால் ஜமாஅத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றம் ஏற்பட முடியும். அல்லாஹ்வுடைய கட்டளைகளை மற்றவர்களுக்கு நினைவூட்டுவது அல்லது இறைவன் என்னை தன்னார்வ அடிப்படையிலான அல்லது முழுமையான முறையில் வாழ்வை அர்ப்பணித்து ஜமாஅத்திற்கு தொண்டாற்றக்கூடிய வாய்ப்பை வழங்கியிருக்கும் போது எந்த அளவுக்கு நான் அல்லாஹ்வின் கட்டளைகளை நடைமுறைப்படுத்தி தொண்டு செய்கின்ற ஒருவரின் பொறுப்புகள் குறித்த ஒரு முன்மாதிரியாக இருக்கிறேன் என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அதன் மூலம் நான் பிறருக்கு அந்த கட்டளைகளை ஞாபகமூட்ட வேண்டும் என்ற உணர்வு உருவாக வேண்டும். நான் பிறருக்கு மட்டும் ஞாபக மூட்டிவிட்டு எனது அமல் அதற்கு எதிராகவும் அதனைவிட்டு விலகியும் இருக்கின்றதா ? அவ்வாறு இருந்தால் அது மிகவும் அஞ்சத்தக்க இடமாகும். அவ்விடத்து இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்பு) செய்ய வேண்டிய தேவையுள்ளது. பொதுவாகவே பாவமன்னிப்பு கோரிக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இது சம்பந்தமாக அதிகமதிகமாக பாவமன்னிப்பு கோர வேண்டி வருகிறது. எந்தவொரு பொறுப்பாளரும் அறிவுரை கூறுவது எனது பணியல்ல என்று நினைத்து விடக்கூடாது என்பதையும் நாம் ஒவ்வொருவரும் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். அதெல்லாம் ஜமாஅத்தின் அமீர் அல்லது ஜமாஅத்தின் சதர் அல்லது செகரட்டரி அல்லது முரப்பி அல்லது பிற பொறுப்பாளர்களின் பணி என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. அவர் விருந்தோம்பல் செயலராக இருந்தாலும், கிளை அமைப்புகளின் படைப்பின் சேவைத்துறை அல்லது விளையாட்டுத் துறை செயலராக இருப்பினும் எவராக இருப்பினும் அவரது முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும். அவர் எந்த பொறுப்பில் பணி செய்பவராக இருப்பினும் சரியே.

மேலும் நான் பலமுறை கூறிவிட்டேன். இது மட்டும் நடந்து விட்டால் ஜமாஅத்தின் ஐம்பது சதவீத மக்கள் அல்லாஹ்வின் அருளால் அல்லாஹ்வின் கட்டளைப்படி நடப்பவர் ஆக முடியும். அது பள்ளியில் தொழுகைகளின் வருகையாக இருக்கட்டும். அல்லது பிற தியாகங்கள் அல்லது அடியார்களின் உரிமை சம்பந்தப்பட்ட விஷயமாக இருப்பினும் சரி. எல்லா மட்டத்திலும் ஜமாஅத்திற்கு சேவை செய்பவர் முதலில் தனக்குள் இந்த கட்டளைகளை நான் எந்த அளவுக்கு நிறைவேற்றுகிறேன் என்று பார்க்கட்டும். அதன் அலசி ஆராய்ந்து தம் நிலையை மேம்படுத்தட்டும்.பிறகு மற்றவருக்கு கூறட்டும். நான் எனக்குள் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளேன் என்று கூறுகின்ற ஒவ்வொரு அஹ்மதிக்கும் ஒரு கடமையுண்டு. அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளைப் பார்த்து அதனை மீண்டும் மீண்டும் ஆய்வு செய்யட்டும். மீண்டும் மீண்டும் கண்முன் கொண்டு வரட்டும். நாம் இவ்வாறு செய்யத் தொடங்கினால் வியத்தகு புரட்சியை நாம் கொண்டு வர முடியும். நம்மை மட்டும் சீர்திருத்துவதுடன் மட்டும் நின்று விடாமல் உலகத்தின் உண்மையான ஒழுக்க நிலையின் தகுதியையே கூட மாற்றி விட முடியும். ஆகவே இதன் பக்கம் நாம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளை தேடி அமல் செய்ய வேண்டும்.

கடந்த குத்பாவில் நான் சில விஷயங்களைக் குறிப்பிட்டேன். அது ஒரு நம்பிக்கையாளரின் சிறப்புத் தகுதியாக இருக்க வேண்டும். இன்றும் சில கருத்துக்களை எடுத்து வைப்பேன். ரமலான் மாதம் ஒரு அடியான் தன்னை சீர்திருத்திக் கொள்ள மிகப்பெரும் வழியாக இருக்கின்றது. இம்மாதம் நாம் நமது வணக்க வழிபாடுகளில் கவனம் செலுத்துகிற மாதமாக இருக்கிற வேளையில் நமது பலஹீனங்களை கவனமூட்டி அதிலிருந்து சீர்திருத்துவதற்கும் உரிய மாதமாகும். ஆகவே, இந்த மாதத்தில் நாம் நமது பலஹீனங்களை அடையாளம் கண்டவாறு அல்லாஹ்வுடைய கட்டளைகளை பேணி தமது சீர்திருத்தத்திற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களின் தகுதி மிகவும் உயர்வானதாக இருக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட காரணங்கள் இல்லாமல் நோன்பையும்

விடக்கூடாது. அதுபோன்று ரமலானின் நோக்கமாகிய இபாதத்தையும் மிகச்சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டும். அதுபோன்று ரமலானில் திருக்குர்ஆன் அதிகமாக ஓதுவதும் சுன்னத்தாகும். ஜிப்ராயீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சிறப்பான முறையில் ரமலானில் திருக்குர்ஆனை ஓதிக்காட்டி வந்தார்கள். ஆகவே, குறிப்பாக ஒவ்வொருவரும் திருக்குர்ஆனை அதிகமாக ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். பிறகு அதிலிருந்து கட்டளைகளைத் தேடி எடுத்து அதனை தன்மீது நடைமுறைப்படுத்த வேண்டும்.

நான் ஏற்கனவே கூறியது போன்று தொழுகை பிற வணக்கங்கள் ஒரு நம்பிக்கையாளருக்கு கட்டாயமாகும். ஆம். ரமலானில் இந்த இபாதத்துகளிலும் மேலும் அழகை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அதுபோன்று அதிகமதிகம் நமது நாவுகளை இறைவனது திக்ரினால் நனைக்க முயற்சிக்க வேண்டும். இதுபற்றி நினைவில் கொள்ள வேண்டியதாவது அல்லாஹ்வுடைய பார்வை நம் உள்ளத்தின் ஆழம் வரை உள்ளது. அவன் நமது நிய்யத்தை அறிகின்றான். நமது செயல்களை நமது எண்ணத்துக்கு ஏற்ப பார்க்கின்றான். நாம் தக்வாவை கைக்கொள்ளும் எண்ணத்தில் பள்ளியை நிரப்ப வேண்டும். பிறகு இந்த மாதத்தில் செய்யும் இபாதத்துகளை வாழ்வின் அங்கமாக்க வேண்டும். தஹஜ்ஜுத் தொழும் வழக்கம் ஏற்பட்டுவிட்டால் அல்லது பகல் நேரத்தில் நபில் தொழும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது எனில் பிறகு அவ்வழக்கத்தை நமது வாழ்வில் நிரந்தர அங்கமாக்க முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்தஆலா திருக்குர்ஆனில் கூறுகின்றான். يَاَيُّهَا النَّاسُ اعْبُدُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ وَالَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ

அதாவது மக்களே உங்களையும் உங்கள் முன்னோரையும் படைத்த இறைவனை வணங்குங்கள். அதன் மூலம் நீங்கள் இறையச்சம் உடையவர்களாவதற்காக.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இது தொடர்பாக ஓரிடத்தில் கூறுகிறார்கள். மக்களே உங்களை படைத்த இறைவனை வணங்குங்கள். வணக்கத்திற்கு தகுதியானவன் உங்களை படைத்தவன் தான். அதாவது உயிருள்ள இறைவன் அவன் தான். அவனிடம் உங்கள் உள்ளத்தை இணையுங்கள். நம்பிக்கை உடைமை என்பது இறைவனுடன் சிறப்பான தொடர்பை ஏற்படுத்துவது. மற்ற அனைத்து பொருள்களையும் அவனுக்கு எதிரில் அற்பமாக கருத வேண்டும். அறிவு மற்றும் கொள்கை சம்பந்தமான சிந்தனைகளை பொறுத்தவரை நாம் அனைவரும் அறிவோம். இறைவனே நம்மை படைத்தவன். இறைவனே எப்போதும் நிரந்தரமாக இருப்பவன். உயிருள்ள இறைவன். வேண்டுதல்களை கேட்கிறான். அவனிடம் உள்ளத்தை இணைக்க வேண்டும். ஆனால் அவ்வாறிருந்தும் நம்மில் பெரும்பாலார் இறைவனிடம் சிறப்பான தொடர்பை ஏற்படுத்த முயற்சிப்பத்தில்லை எந்த அளவுக்கு தேவையோ அந்த அளவுக்கு செய்வதில்லை. மற்றெல்லா தொடர்புகளையும் இந்த தொடர்புக்கு முன்னால் துச்சமாக ஆக்க வேண்டும். ரமலானின் சூழ்நிலையின் தாக்கத்தால் இதன் பக்கம் அடியெடுத்து வைக்க முயற்சி செய்கின்றனர். ரமலானுக்குப் பிறகு பெரும்பாலார் நிலை எப்படிப்பட்டதாக ஆகிவிடுகிறது என்றால் சிறிது சிறிதாக பின்தங்கி பிறகு முற்றிலும் நின்று விடுகிறது. நாம் நமது அமல் மூலம் இறைவனைத் தவிர பிற அனைத்தும் அற்பமானவை என்று நிரூபிக்க முயற்சி செய்ய வேண்டும். இதனை புரிவதற்கு உள்ளத்தில் தக்வாவை உருவாக்குவது அவசியமாகும். அல்லாஹ்தஆலா இந்த வசனத்தில் இதனைத் தான் கூறியுள்ளான். அல்லாஹ்வுக்கு இபாதத் செய்யுங்கள். அதன் மூலம் உங்கள் உள்ளத்தில் அல்லாஹ்வின் மீது அச்சம் உருவாவதற்காக.

இபாதத்தின் நோக்கம் இறைவனை கண்டறிவது மட்டும் அல்ல. மாறாக, தக்வாவை உருவாக்கி தமது ஆன்மீக உயர்வுகளை பெறுவதாகும். அல்லாஹ்வின் பண்புகளை புரிவது. இறைவனது பண்புகளை புரியும் போது அதற்கு எதிரில் ஒவ்வொன்றும் துச்சமாக முடியும். ஆகவே, உங்கள் இறைவணை வணங்கங்கள் என்று இறைவன் கூறுமிடத்து உங்கள் எதிர்காலத்தின் எல்லா வளர்ச்சிகளும் உங்கள் இறைவனுடன் தொடர்புள்ளதாகும். நீங்கள் அவனுக்கே இபாதத் செய்யும் போது படைத்துக் பரிபாலிக்கும் பண்பு மூலம் உலகியல் பராமரிப்பு நடக்கின்ற அதேவேளையில் ஆன்மீகத் தகுதிகளும் கூட முன்னேற்றம் பெறும் அல்லது வளர்ச்சி பெறும்.

நமது ஆன்மீக நிலையில் வளர்ச்சி ஏற்படவில்லையெனில் நாம் நமது இபாதத்தின் கடமையை சரியாக நிறைவேற்றவில்லை என்று பொருள். விளைவு, இறைவனது படைத்துக் காத்தோம்பும் பண்பிலிருந்து நாம் நமது ரப்பின் இபாதத்தின் உரிமையை முழுமையாக செலுத்திவிட்ட நிலையில் ஆன்மீக ரீதியாகவும் இந்த பண்பிலிருந்து பயன்பெறுவோம் என்றால் தக்வாவில் வளர்ச்சி அடைவோம். தக்வாவில் வளர்ச்சி பெறும்போது நமது இபாதத்துகள் ரமலானுடன் மட்டும் நின்றுவிடாது. மாறாக, முழு வருடமும் முழு வாழ்நாளையும் சூழ்ந்ததாக ஆகிவிடும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள். அசல் விஷயம் என்னவெனில் மனிதன் படைக்கப்பட்டதன் அசல் நோக்கம் இபாதத் ஆகும்.

கூறுகிறார்கள்: இன்னோர் இடத்தில் கூறுகிறான். وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ அதாவது இபாதத் என்பது மனிதன் எல்லாவிதமான அழுக்குகளையும், மாசுகளையும் அகற்றி உள்ளம் என்ற நிலத்தை ஒரு விவசாயி நிலத்தை தூய்மை போன்று தூய்மைப்படுத்துவதற்கு பெயராகும்.

ஆகவே நாம் எப்போதும் எச்சரிக்கையாக இருந்து நமது இபாத்துகளை கண்காணித்து பாதுகாத்து வர வேண்டும். அதன் மூலம் நாம் இறையருளை நெருங்க முடியும். மேலும் ஆன்மீக முன்னேற்றங்களை பெற முடியும்.

பிறகு அல்லாஹ் தஆலாவுடைய ஒரு கட்டளை இதுவாகும். يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَخُوْنُوا اللّٰهَ وَالرَّسُوْلَ وَتَخُوْنُوْٓا اَمٰنٰتِكُمْ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலுக்கு நம்பிக்கை துரோகம் செய்யாதீர்கள். அதனால் நீங்கள் உங்கள் ஈமானுக்கு அறிந்து கொண்டே நம்பிக்கை துரோகமிழைத்தவர்களாவீர்கள்.

இது மிகவும் கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான கட்டளையாகும். நம்பிக்கை துரோகம் என்பது பெரிய பெரிய விஷயங்களில் பெரிய பணிகளில் தான் நடக்கும் என்பதல்ல. சின்னஞ்சிறு விஷயங்களில் இருந்து பெரிய பெரிய விஷயங்கள் வரை சூழ்ந்திருக்கும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு தூய ஜமாஅத்தை நிலைநாட்டுவதற்காக

வந்தார்கள். அன்னார் தமது பைஅத் நிபந்தனையில் குறிப்பாக நம்பிக்கை துரோகம் செய்யக்கூடாது என்றும் அதிலிருந்து விலகுவதற்கும் பைஅத்தின் 2 ஆம் நிபந்தனையில் நம்மிடம் உறுதிமொழி வாங்கியுள்ளார்கள். ஒவ்வொரு தீமையும் சிறியதாக இருப்பினும் பெரியதாக இருப்பினும் தீமையேயாகும். ஆனால் சில தீமைகள் எத்தகையது எனில் அது பிற தீமைகளை உற்பத்தி செய்து கொண்டே செல்கின்றன. அவற்றுள் நம்பிக்கை துரோகம் என்பதும் அத்தகைய ஒரு தீமையாகும்.

அல்லாஹ் கூறுகின்றான். நம்பிக்கை துரோகம் செய்யும் வழக்கமாவது தனது அமானிதம் பேணுதலையும் கடமையாற்றுவதிலும் கூட துரோகமிழைக்கச் செய்து விடுகிறது.

அல்லாஹ் கூறுகின்றான். நம்பிக்கை துரோகி ஒருவர் அல்லாஹ்வின் கட்டளைகளையும் நிறைவேற்ற முடியாது. அவனது ரஸூலின் கட்டளையையும் நிறைவேற்ற முடியாது. அடியார்களின் உரிமைகளையும் நிறைவேற்ற முடியாது. விளைவு அத்தகைய மனிதரின் இபாதத்தையும் கூட அல்லாஹ் கபூல் செய்ய மாட்டான். இபாதத் செய்பவராவது பெரிய விஷயம். ஒரு நம்பிக்கை துரோகியை ஈமான் கொண்டவர் என்றும் கூற முடியாது.

இன்றும் சொல்வதென்றால் ஒரு அறிவிப்பில் எந்த அளவுக்கு வருகிறது என்றால் ஒரு முஸ்லிமின் கையிலும் நாவிலும் இருந்து பிற முஸ்லிம் கூட பாதுகாப்பாக இருக்க வேண்டும். ஆகவே, ஒவ்வொரு மனிதனின் மீதுள்ள கடமைகளையும் நிறைவேற்றுவது ஒரு முஸ்லிமின் மீது கடமையாகும். அந்த கடமையை நிறைவேற்றாமல் இருப்பது அவனை நம்பிக்கை துரோகியாக்கி விடுகிறது.

பிறகு ஓர் அஹ்மதிக்கு ஜமாஅத் அமைப்பை பேணுவதும் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றுவதும் அவசியமாகும். ஜமாஅத்தின் ஒவ்வொரு தனி மனிதனும் தத்தமது கூட்டங்களில் இந்த உடன்படிக்கையை கூறுகிறார். தாம் ஜமாஅத் அமைப்புக்கு கட்டுப்பட்டு வாழ்வோம் என்று. ஆகவே இந்த உடன்படிக்கையும் கூட ஓர் அமானிதம் ஆகும். அதனை நிறைவேற்றுவதும் அவசியமாகும். தமது எல்லா ஆற்றல்களையும் பயன்படுத்தியவாறு அதனை நிறைவேற்றுவதது அவசியமாகும். கிலாஃபத்துடன் தொடர்புடன் இருப்பதும் கட்டுப்படுவதும் அவசியமாகும். இதுவும் உடன்படிக்கையில் மொழியப்படுகிறது. அமானிதத்தின் உரிமையை நிறைவேற்றுவதில் நினைவில் கொள்ள வேண்டியதாவது குடும்ப விவகாரங்களில் பையனும் பெண்ணும் திருமண உறவின் மூலம் இணையும் போது ஒருவர் மற்றவர் மீது அவர்களுக்கும் சில உரிமைகள் உள்ளன. அந்த உரிமையை நிறைவேற்றுவதும் ஒரு அமானிதமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது சம்பந்தமாக எந்த அளவிற்கு கூறியுள்ளார்கள் என்றால் ஒருவர் ஒரு பெண்ணுக்கு திருமணத்திற்காக மஹரை நிர்ணயம் செய்கிறார். ஆனால் தாம் அதை வழங்கப் போவதில்லை என்பது அவரது நிய்யத்தாக இருக்கிறது எனில் அவர் விபச்சாரன் ஆவார். ஒருவரிடம் கடன் வாங்குகிறான். அதனை திருப்பித் தரப்போவதில்லை என்ற எண்ணத்தில் அதனை வாங்குவார் எனில் அவர் திருடராவார். பிறகு பாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமானிதத்தின் தகுதியை எந்த அளவுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். வழியுறுத்தியுள்ளார்கள். ஒருவரிடம் ஒரு முஸ்லிம் சகோதரர் ஆலோசனை கேட்கிறார். ஒருவர் யோசிக்காமல் ஆலோசனை வழங்குகிறார் என்றால் அவர் நம்பிக்கை துரோகம் செய்தவராவார். அதாவது எல்லா அம்சங்களையும் யோசித்து சரியான முறையில் ஆலோசனை வழங்கவில்லை எனில் அதுவும் நம்பிக்கை துரோமேயாகும்.

ஆகவே இவ்விவகாரத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம், அமானிதத்தை வழங்குதல், நம்பிக்கை துரோத்தை விட்டு விலகுதல் குறித்து என்ன தகுதியை பார்க்க விரும்பினார்கள்?

அன்னார் ஓரிடத்தில் கூறுகிறார்கள். எந்த மனிதர் தீய பார்வையில் இருந்தும், நம்பிக்கை துரோகத்தில் இருந்தும், லஞ்சத்திலிருந்தும், ஒவ்வொரு அனுமதிக்கப்படாத பணிகளில் இருந்தும் கழிவிரக்கம் தேடவில்லையோ அவர் எனது ஜமாஅத்தை சேர்ந்தவர் அல்ல.

கூறுகிறார்கள். ஒவ்வொரு ஆணும் மனைவியிடமும், மனைவி கணவரிடமும் நம்பிக்கைத் துரோகம் செய்வார் எனில் அவர் ஜமாஅத்தைச் சார்ந்தவர் அல்ல.

மேலும் கூறுகிறார்கள். இறைவன் ஒருவன் என்று நம்புவதுடன் அவன் படைப்பினங்களின் உரிமையை பறிக்காமல் இருப்பது மிக அவசியமாகும். எவராவது தனது சகோதரரின் உரிமையை பறிப்பார் எனில் அவர் நம்பிக்கைத் தூரோகம் செய்வார் எனில் அவர் லாயிலாஹ இல்லல்லாஹ் வை நம்புபவர் அல்ல.

பிறகு அன்னார் கூறினார்கள். திருக்குர்ஆனில் அல்லாஹ் தக்வாவை ஆடை என்று பெயரிட்டுள்ளான். இந்த வகையில் லிபாசுத் தக்வா அதாவது தக்வாவின் ஆடை என்பது குர்ஆனின் வாசகமாகும். ஆன்மீக அழகு ஆன்மீக வனப்பு தக்வாவின் மூலமே பிறக்கிறது என்பது இதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தக்வா என்பது மனிதன் இறைவனில் எல்லா அமானிதங்களையும், ஈமானிய உடன்படிக்கைகளையும், அதுபோன்று படைப்பினங்களின் எல்லா அமானிதங்களையும், உடன்படிக்கைகளை முடிந்தவரை பேண வேண்டும் என்பதாகும். அதாவது அவற்றின் நுட்பத்தின் நுட்பமான அம்சங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும். ஆக, அமானிதத்தின் நுட்பமான அம்சத்தையும் தேடி அதனை நடைமுறைப்படுத்துவது நம்மை அமானிதம் பேணுபவர் ஆக்குகிறது. அதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும். நாம் தர வேண்டிய உள்ள எல்லா உரிமைகளும் அமானிதங்களாகும். நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லா பொறுப்புகளும் அமானிதங்களாகும். அவற்றை நிறைவேற்றுவது நமக்கு கடமையாகும்.

அதனை நிறைவேற்றுவது அவசியம். நாம் இறைவனது அருள்களுக்கு வாரிசாக விரும்பினால் நம்மில் ஒவ்வொருவரும் இதில் மிகவும் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

பிறகு அல்லாஹ்வுடைய இன்னொரு கட்டளைப்பற்றி இன்று விளக்குவதற்காக எடுத்துள்ளேன். அது சமுதாயத்தின் அழகை பேணுதலாகும். அல்லாஹ் கூறுகிறான்.

الذين ينفقون في السراء والضراء والكاظمين الغيظ والعافين عن الناس ۗ والله يحب المحسنين

எவர் ஒருவர் வளத்திலும் வறிய நிலையிலும் செலவு செய்வாரோ மேலும் கோபத்தை விழுங்கி விடுவாரோ மக்களை மன்னிப்பாரோ அத்தகைய நன்மை செய்பவர்களை அல்லாஹ் நேசிக்கின்றான்.

ஏற்கனவே கூறப்பட்டுள்ளது போன்று உரிமைகளை வழங்குவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். இந்த வசனத்தில் உரிமைகளை வழங்குவதன் தரம் எங்ஙணம் இருக்க வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான். மேலும் அதனினும் மேலே சென்று நமக்கு அறிவுரை பகர்ந்துள்ளான். உரிமைகளை தருவதைவிட்டும் மேலே சென்று தியாகங்களை செய்வதின் மூலமே ஒரு சமுதாயத்தின் அழகு உருவாகிறது. வெறும் உரிமை வழங்கினால் போதாது. சில நேரங்களில் உரிமைகளை தருவதற்கு தியாகங்களும் கூட செய்ய வேண்டியது ஏற்படுகின்றது. ஆக, சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதரும் மற்றவரின் உரிமையை தருவது மட்டுமின்றி தியாகம் செய்து உரிமைகளை தர முயற்சி செய்கிறார் எனில் அந்த சமுதாயம் உண்மையில் ஜன்னத்திற்கு ஈடான சமுதாயம் என்று கூறத்தக்கதாக இருக்கும். இந்த காட்சியை நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சஹாபிகளிடத்து காண முடிந்தது. அதுபற்றி இறைவன் கூட கூறினான்.

அவர்கள் சுயம் வறியவர்களாக இருந்தும் தம்மைவிட பிறருக்கு முன்னுரிமை வழங்குகின்றனர். அத்தகைய சிந்தனையும் செயலும் இருக்கும் எனில் பிறகு தியாகத்தின் ஜீவன் பிறக்கிறது. தமது நப்ஸின் உணர்வுகளை மனிதன் அமுக்கி விடுகின்றான். பிறரது நலனை விரும்புகிறான். நன்மையை நாடுகிறான். இந்த செயலின் மிக உயரிய உதாரணம் நமக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்மாதிரியில் தென்படுகிறது. அன்னார் தமது மகளை கொன்றவனைக்கூட மன்னித்து விட்டார்கள் என்று பார்க்கின்றோம். எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. பிறகு கோபத்தை அடக்குதல், உயரிய நல்லொழுக்கம் காட்டுதல் தொடர்பாக தமது சஹாபாக்களுக்கு எவ்வாறு அறிவுரை கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களுடைய நிலை எவ்வாறிருந்தது என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். பெருமானார் (ஸல) அவர்கள் ஒருபோதும் தமக்காக தம்மீது செய்யப்பட்ட வரம்புமீறுதல்களுக்காக பழிவாங்கியதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள். நம்பிக்கையாளர் என்பவர் கோபத்தை விழுங்கி விடுகின்றார். அல்லது அநீதி இழைப்வர்களை மன்னித்து விடுகின்றார். வீணான செயல்களுக்கு அதைப் போன்ற செயல் மூலம் பதில் தருவதில்லை. அன்னார் ஜமாஅத்திற்கு அறிவுரை கூறியவாறு கூறினார்கள். இந்த ஜமாஅத்தை தயார் செய்வதன் நோக்கமாவது நாவு, காது, கண் ஒவ்வொரு உறுப்பிலும் இறையச்சத்தை நிலைபெறச் செய்வதாகும். தக்வாவின் ஒளி அதற்கு உள்ளும் வெளியிலும் இருக்க வேண்டும். அழகிய நல்லொழுக்கத்தின் அழகிய முன்மாதிரி இருக்க வேண்டும். சிறு சிறு விஷயங்களில் காழ்ப்புணர்ச்சி மற்றும் கோபம் உருவாகிறது. ஒருவருக்கொருவர் சண்டையில் நிற்கின்றனர். அத்தகைய மக்களுக்கு ஜமாஅத்தில் சிறிதும் பங்கில்லை. ஒருவர் ஏசினால் மற்றவர் அதனை கேட்டு அமைதியாக இருப்பதில் அவருக்கு என்ன கஷ்டம் வந்து விடப்போகிறது என்று தான் எனக்கு தெரியவில்லை. முதலில் ஜமாஅத்தின் சீர்திருத்தம் நல்லொழுக்கத்தில் இருந்து தான் ஆரம்பமாகிறது.

முதலில் ஆரம்பத்தில் பொறுமையில் முன்னேற வேண்டும். சிறந்த வழி என்னவென்றால், ஆவது ஒருவர் தீய வார்த்தை கூறினால் அவருக்கு எதிராக வேதனையடைந்த உள்ளத்துடன் அல்லாஹ் அவரை சீர்திருத்த வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும். உள்ளத்திலும் காழ்ப்புணர்ச்சியை ஒருபோதும் வளர்க்கக்கூடாது. உலகில் ஒரு சட்டம் இருப்பது போன்று இறைவனுக்கும் ஒரு சட்டம் உண்டு. உலகம் தனது சட்டத்தை விடாத போது அல்லாஹ் தனது சட்டத்தை எவ்வாறு விடுவான். ஆக, எதுவரை மாற்றம் ஏற்படுவதில்லையோ அதுவரை அவனிடத்தில் உங்களுக்கு சிறிதும் கண்ணியம் இல்லை. சகிப்புத்தன்மை, கண்டும் காணாமை, பொறுமையாகிய உயரிய பண்புகளின் இடத்தில் மிருகத்தனத்தை மேற்கொள்வதை இறைவன் ஒருபோதும் விரும்ப மாட்டான். நீங்கள் இந்த அழகிய பண்புகளில் வளர்ச்சி பெறுவீர்கள் எனில் மிக விரைவில் இறைவன் வரை சென்று சேர்வீர்கள்.

அல்லாஹ் தஆலா இந்த ரமலானில் நாம் நமது இபாதத்துகளின் தரத்தை உயர்த்துமிடத்து அதனை நிரந்தரமாக வைக்கவும் தவ்ஃபீக் தருவானாக. அதே வேளையில் நமது பிற நல்லொழுக்கத் தகுதிகளையும் நிலைநாட்டவும் அதனை நிரந்தரமாக்கவும் தவ்ஃபீக் தந்தருள்வானாக. நான் ஏற்கனவே கூறியது போன்று நமது ஜமாஅத்தின் பணி செய்வோர் எந்த நிலையிலும் எல்லாவற்றிற்கும் முதலில் நமது முன்மாதிரியை எடுத்து வைக்க வேண்டும். வீடுகளிலும் சரி; வெளியிலும் சரி. துஆவின் பக்கம் மீண்டும் கவனமூட்டுகின்றேன். ரமலானின் முதல் குத்பாவிலும் கூறினேன். இப்போதும் சுருக்கமாக கூறுகிறேன். ஜமாஅத்தின் வளர்ச்சிக்கும், எதிரிகளின் ஆபத்தான சதிகளில் இருந்து தப்பிக்கவும் இக்காலத்தில் அதிகமாக துஆ செய்யுங்கள். உங்களுக்காக துஆ செய்யும் அதே வேளையில் இஸ்லாத்தின் வெற்றிக்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் தஆலா நம் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 03.07.2015
Tamil Translation : Muallim. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516